# மணப்பாறை நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2023 – 2024

# மணப்பாறை நகராட்சி
# 2023–2024 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1) அமைப்பும் மேலாண்மையும்:–

இந்நகராட்சி 1.10.1966–ம் தேதியிலிருந்து 30.9.66 ஆம் தேதிய ஊரக வளர்ச்சித்துறை அரசாணை எண்.2318ன் படி 3–ஆம் நிலை நகராட்சியாக உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நகராட்சி எல்லையில் கண்ணுடையான் பட்டி, கலிங்கபட்டி, உசிலம்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களும், அதனுள் அடங்கிய குக்கிராமங்களும் இருந்தன. (செவலுார் தாய் கிராமம் தவிர) கண்ணுடையான்பட்டி, கலிங்கப்பட்டி உசிலம்பட்டி ஆகியவைகளை 9.4.74 ம் தேதி 1059ம் எண். கொண்ட அரசாணையின்படி பிரிக்கப்பட்டு, பஞ்சாயத்துக்களுடன் இணைக்கபட்டது. மணப்பாறை நகர் பஞ்சாயத்து பகுதி மட்டும் தற்போதைய நகராட்சியாக இருந்து வருகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 28.6.78 ஆம் தேதிய அரசாணை எண். 1087ன் படி 1.7.78ஆம் தேதியிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. நகராட்சி நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 85 நாள் 22.5.98 தேதிய ஆணையின்படி மணப்பாறை முதல்நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது.

இந்நகராட்சி 01.11.1967 தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உத்திரவு எண்.2126 ன் படி 18 தொகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. அதற்குபின் இந்நகராட்சி 04.07.1974 ஆம் தேதி உள்ளாட்சி உத்திரவு எண்.1602 ன் படி 20 தொகுதிகளாக பிரிக்கப்பட்டு இருந்தது.

| | | |
|---|---|---|
| 1) | நகர பரப்பளவு | : 20.85 சதுரகிலோ மீட்டர் |
| 2) | மக்கள் தொகை | : 40510 |
| 3) | நகர்மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை | : 27 |
| | நகராட்சியின் நிலை | : முதல்நிலை நகராட்சியாகும் |
| | நகராட்சி எல்லைக்குள் அடங்கியுள்ள வருவாய் கிராமங்கள் | : செவலுார், |

### *கூட்டங்கள்*

மாதந்தோறும் சாதாரணக்கூட்டம் மற்றும் அவசர நிமித்தம் அவசரக்கூட்டம் கூட்டப்பட்டது. அறிக்கை ஆண்டில் கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை.

01.04.2023 முதல் 31.03.2024 முடிய கூட்டப்பட்ட கூட்டங்களின் விபரம்

| | கூட்டம் | பொருள்கள் |
|---|---|---|
| ஒப்பந்தக்குழு கூட்டம் | –– | –– |
| சாதாரணக்கூட்டம் | 7 | 249 |
| அவசரக்கூட்டம் | 1 | 13 |
| சிறப்புக்கூட்டம் | 2 | 2 |
| நியமனக்குழு கூட்டம் | –– | –– |

2. பணியில் ஈடுபட்டுள்ளவர்கள்:

| வ. எண் | திரு/திருமதி | பதவி விபரம் | பணிபுரிந்த காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | முடிய |
| 1. | எஸ்.என்.சியாமளா | ஆணையாளர் | 01.04.2023 | 28.08.2023 |
| 2. | ஆர்.ராதா | ஆணையாளர் (கூ.பொ) | 28.08.2023 | 02.09.2023 |
| 3 | எஸ்.என்.சியாமளா | ஆணையாளர் | 03.09.2023 | 17.01.2024 |
| 4 | பு.ரா.பாலசுப்ரமணியம் | ஆணையாளர் | 18.01.2024 | 31.03.2024 |
| 5. | மு.ஜெயகிருஷ்ணன் | நகராட்சி பொறியாளர் | 01.04.2023 | 31.07.2023 |
| 6 | ஆர்.ராதா | நகராட்சி பொறியாளர் | 01.08.2023 | 29.02.2024 |
| 7 | க.பாலகிருஷ்ணன் | மேலாளர் | 01.04.2023 | 30.04.2023 |
| 8 | பி.மணிமாறன் | மேலாளர் (பொ) | 01.05.2023 | 15.10.2023 |
| 9 | அ.மேரிபிந்து | மேலாளர் | 16.10.2023 | 04.12.2023 |
| 10 | திரு.பா.நல்லதம்பி | மேலாளர் (பொ) | 05.12.2023 | 31.03.2024 |
| 11 | எஸ்.அந்தோனிஸ்டீபன் | துப்புரவு அலுவலர் | 01.04.2023 | 31.03.2024 |
| 12 | பி.சரவணன் | துப்புரவு ஆய்வர் | 01.04.2023 | 31.03.2024 |
| 13 | ம.தீபன் சக்கரவர்த்தி | துப்புரவு ஆய்வர் | 01.04.2023 | 31.03.2024 |
| 14 | ஆர்.ரஞ்சனி | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 01.04.2023 | 31.03.2024 |
| 15 | ஆ.வெங்கடேசன் | நகரமைப்பு அலுவலர் | 01.06.2023 | 31.03.2024 |
| 16 | கே.குமரேசன் | நகரமைப்பு ஆய்வர் | 01.04.2023 | 31.03.2024 |
| 17 | எம்.ஜான்பால்ராஜ் | வருவாய் ஆய்வர் | 01.04.2023 | 31.03.2024 |

## ***3) 2023–24 வழக்குகள் மற்றும் சட்ட செலவுகள்:***

நடப்பு ஆண்டில் வழக்குகளுக்கு
செலவு செய்யப்பட்ட தொகை : :ரூ. 2.60இலட்சம்

சென்ற ஆண்டு செலவிடப்பட்டதொகை : ரூ.2.66 இலட்சம்

### *4) பொறியாளர்* பிரிவு

இந்நகராட்சியில் இரண்டாம்நிலை நகராட்சிப் பொறியாளர்/உதவி செயற்பொறியாளர் பதவி ஏற்படுத்தபப்பட்டது. அறிக்கை ஆண்டில் பொறியியல் பிரிவு பணியாளர்கள் சம்பளம் ரூ. 45.79 லட்சம் வழங்கப்பட்டது.

### போக்குவரத்துக்கள்: சாலைகள், பாலங்கள், கரிசல் கற்கட்டிடங்கள் சாலைகள்:

இந்நகராட்சி வழியாகச்செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளும் மாநில நெடுவழிச்சாலைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | சென்னையிலிருந்து கன்னியாகுமரிவரை | தேசியநெடுஞ்சாலை ( எண். எச். 45) |
| 2) | மணப்பாறை | : துவரங்குறிச்சி மாநில நெடுவழிச்சாலை |
| 3) | மணப்பாறை | : ஆண்டிப்பட்டி சாலை |
| 4) | மணப்பாறை | : கோவில்பட்டி சாலை |
| 5) | மணப்பாறை | : குளித்தலை சாலை |

தற்பொழுது அனைத்து தார்சாலைகளும் திருப்திகரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

### 5) நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலை விவரங்கள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | தார் சாலைகள் | : | 49.92 கி.மீ |
| 2) | சிமிண்ட் சாலை | : | 19.06 கி.மீ |
| 3) | PB சாலைகள் | : | 0.973 கி.மீ |
| 4) | மண் சாலை | : | 12.12 கி.மீ |
| | | : | 82.07 கி.மீ |

### 6) உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்

1. அரசினர் மேல்நிலைப்பள்ளிகள், ஆண்கள் 1 பெண்கள் –1
2. சிறுமலர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
3. புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி

4. புனித ஆந்திரேயா உயர்நிலைப்பள்ளி
5. லெட்சுமி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி
6. குரு மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி
7. மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
8. சௌமா மேல்நிலைப்பள்ளி

**7) தனியார் பள்ளிகள் பொது நூலகங்கள்**

பொது நூலகங்கள் அறிக்கையாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. ஆனால் நூலக ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படும் மாவட்ட கிளை நூலகம் ஒன்று இந்நகரில் செயல்பட்டு வந்தது. மணப்பாறை நகராட்சியில் 2022 -23ஆம் ஆண்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் வார்டு எண்.11, நாளங்காடி பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் ரூ-106.50இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

**8) சந்தைக்கு மற்றும் விழாக்களுக்கு தண்ணீர் வசதி**

அறிக்கை ஆண்டில் உள்ளூர் முக்கியத்துவம் பெற்ற திருவிழாக்களும் வாரச்சந்தையும் வழக்கம்போல் நடைபெற்றது, தேவையான சுகாதாரப்பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இந்நகராட்சி பகுதிக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்பாட்டில் 8 குடிநீர் விநியோகத்தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் ஒருநாளைக்கு சுமார் 30.00 இலட்சம் லிட்டர் கொடுக்கப்பட்டு வருகிறது.

வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை } -- 8733

**9) கழிவுநீர் கால்வாய்**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் இல்லை திறந்தவெளி கால்வாய் 43.250 கி.மீ. பராமரிக்கப்பட்டு வருகிறது.

**10)** இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகள் பராமரிப்பு செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அவ்வப்போது அகற்றப்பட்டு வருகிறது.

**11) *தெருவிளக்கு வசதி:***

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்ட விளக்குகளின் மொத்த எண்ணிக்கை விவரம்

| | | |
|---|---|---|
| 1 | LED | -- 1821 எண்ணிக்கை |
| 2. | சோடியம் – வேப்பர் விளக்கு 250 W | -- 222 எண்ணிக்கை |
| | மொத்தம் | – 2043 எண்ணிக்கை |

சிறுவர் பூங் கா மற்றும் உடற்பயிற்சி மையம் :–

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட இரண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மணப்பாறை நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் KNMT 2021 – 2022 ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11-ல் அண்ணாநகர் பூங்காவை மேம்படுத்தும் பணி | 43.00 |
| 2. | மணப்பாறை நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் KNMT 2022 – 2023 ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் சாய் அக் ஷயா நகர் பூங்காவை மேம்படுத்தும் பணி | 31.35 |

## 12) நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்

1. MLA FUND
2. MP FUND
3. DAIF
4. SBM 2.0
5. KNMT
6. NNT
7. NSMT
8. CMBFS – Common Kitchen
9. 15th CFC
10. 15th CFC – Health
11. NULM
12. NUHM

## 13) பொது நலம் மருத்துவ உதவி

இந்நகராட்சி எல்லைக்குள் 16 தனியார் மருத்துவ மனைகளும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளன.

தனியார் மருத்துவ மனைகள் விவரம்

1.மோகன்தாஸ் கிளினிக்
2.பாண்டியன் கிளினிக்
3. செல்வம் கிளினிக்
4. ஜெயம் மருத்துவமனை
5. பாலாஜி நர்சிங் ஹோம்
6. ரெத்தினதாஸ் நர்சிங் ஹோம்
7. நசுருதீன் கிளினிக்
8. சிந்துஜா மருத்துவமனை
9, ஸ்ரீ குமரன் மருத்துவமனை
10.தயாள் நர்சிங் ஹோம்
11.மணவை கிளினிக்
12.சுகம் கிளினிக்
13.AJ மருத்துவமனை
14.GKM மருத்துவமனை
15.காசிம் மருத்துவமனை
16.ஸ்ரீகுரு மருத்துவமனை
17.ஸ்ரீமருத்துவமனை

## 14). இடவசதி தளவாடங்கள்:

அரசு மருத்துவமனை, நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இயங்கி வந்தது. மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையாக்கப்பட்ட பின்பு இடத்தை அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

## 15 ) பொது சுகாதாரம்:

இந்நகராட்சியில் நகர் நல அலுவலர் பதவி இல்லை அறிக்கை ஆண்டில் சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வர் இருவர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் 5 நபர்கள் மற்றும் நிரந்தர தூய்மை பணியாளர்கள் 56 நபர்களும், மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் 69 நபர்கள் நபர் பணிபுரிந்து வருகின்றனர். இத்தலைப்பின் சம்பளம் மற்றும் இதரவகையினர் நடப்பு ஆண்டில் ரூ.538.86 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 16) பிறப்பு விகிதம், மற்றும் மகப்பேறு உதவி

அறிக்கையாண்டில் பிறப்பு, இறப்புகளை பதிவு செய்யும் பணியை சுகாதார ஆய்வாளர் பதவிக்குரிய முழு அதிகாரம் பெற்ற ஒரு சுகாதார ஆய்வர் பார்த்து வருகிறார். நகராட்சி பராமரிப்பின்கீழ் இருந்து வந்த மகப்பேறு நிலையம் 5.5.72ல் அரசு பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டது. பிறப்புகள் பதிவு செய்வதில் அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் 2505 ஆகும். நகராட்சி நிர்வாகத்தின் கீழ் பிள்ளைப்பேறு பார்க்கப்படவில்லை. நகராட்சியால் அறிக்கையாண்டில் மகப்பேறு இல்லை குழந்தைகள் காப்பகம் பராமரிக்கப்படவில்லை. ஒரு சுகாதார ஆய்வாளர் பணியிடம் அறிக்கையாண்டில் காலியாக இருந்து வந்தது.

## 17) இறப்பு விகிதம் மற்றும் தொற்று நோய்கள்:

| | | |
|---|---|---|
| 1) | அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் | – 369 |
| 2) | காலரா, அம்மைபோன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்புகள் ஏதும் இல்லை மற்ற நோய்கள் மூலம் ஏற்பட்ட மரணம் குறித்த விளக்கம் கீழ்கண்டவாறு உள்ளன. | – இல்லை |

சென்ற அறிக்கை ஆண்டில்

| | | | |
|---|---|---|---|
| 1) | காலரா | -- | இல்லை |
| 2) | அம்மை | -- | இல்லை |
| 3) | பிளேக் | -- | இல்லை |
| 4) | மலேரியா | -- | இல்லை |
| 5) | சீதபேதி | -- | இல்லை |
| 6) | காய்ச்சல் | -- | – |
| 7) | பிறமூச்சுவை நோய்கள் | -- | – |
| 8) | பிறகாரணங் களால் | -- | 369 |
| 9) | வெறிநாய் கடியினால் இறப்பு | -- | இல்லை |

இந்நகராட்சியில் கொசுத்தடுப்பு ஒழிப்புத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பொது சுகாதார இயக்குநர், முதுநிலை பூச்சியியல் வல்லுநர் அறிவுரைகளின்படி, Egg, larva, Pupaadult, Stage க்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பான் டெமிபாஸ், பைரீத்திரம் அபேட் பென்தியான என்ற மருந்து மூலம் கொசு உற்பத்தி ஒழிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக தண்ணீர் தேங்கி உள்ள இடங்களில் மருந்து தெளிக்கப்பட்டது மற்றும் பைரித்திரம் கொண்டு கொசு மருந்து புகைஇயந்திரம் மூலம் புகைபரவச்செய்து கொசுக்களை அழிக்கப்பட்டும் வருகிறது. கொசு ஒழிப்பு பணிக்கு 5 பெரிய புகைமருந்து இயந்திரம் 5 சிறிய புகை மருந்து இயந்திரங் கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் டெங் கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் 10 நபர்கள்.

**18) கொக்கிப்புழு தொற்று:**

அறிக்கை ஆண்டில் இந்நோய் நகராட்சிப்பகுதியில் இல்லை.

**19) நோய்தடுப்புத்திட்டம்:**

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள குழந்தைகளுக்கு தற்காலிக வேக்சினேட்டர் மூலமாக சொட்டுமருந்து ஒவ்வொரு புதன் கிழமையும், வழங்கப்பட்டுவருகிறது. ஆண்டுதோறும் பள்ளிக்கான வளர்இளம் பெண்களுக்கு விட்டமன் மருந்து அளிக்கப்படுகிறது. இத்திட்டம் துணை இயக்குநர், பொது சுகாதாரம், திருச்சி அவர்களின் உத்திரவின்படி, புத்தாநத்தம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ குழுவினால் நடத்தப்பட்டு வருகிறது.

***20) குடும்ப நலத்திட்டம்:***

குடும்ப நலத்திட்டத்திற்கென அலுவலர் எவரும் தனியாக நியமனம் செய்யப்படவில்லை.

**20 ) அரசு மருத்துவமனை**

இந்நகராட்சியின் கீழ் நகர்புற ஆரம்ப சுகாதா நிலையம் 22.06.2013 முதல் செயல்பட்டு வருகிறது. ஒரு சுகாதார ஆய்வாளர்கள் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்து வருகின்றார். அறிக்கை ஆண்டில் சுகாதாரத்தைப்பற்றிய பிரசுரங்கள் சுகாதார சிப்பந்திகளைக்கொண்டு விளம்பரம் செய்யப்பட்டு விழிப்புணர்சி ஏற்படுத்தப்பட்டது கொண்டு 27 வார்டுகளில் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் 5 நபர்கள் கொண்டு அவ்வப்போது திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக கூட்டங் கள் நடத்தப்பட்டு வருகிறது.

***21 பொதுசுகாதாரம் துப்புரவு பாதுகாப்பு:***

அறிக்கை ஆண்டில் 4 பொதுக்கழிவறைகளும், 17 சமுதாய கழிவறைகளும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. காலை, மாலை இருமுறை தெருக்கள் கூட்டி சுத்தம் செய்யப்பட்டு குப்பைகள் நகராட்சி லாரிகள் மூலமாகவும் திருச்சி – திண்டுக்கல் பைபாஸ் ரோட்டில் உள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது.

நகரில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் முழுதும் காலை ஒரு முறை சுத்தம் செய்யப்படுகிறது. மேற்படி பணிகளை 5 மேற்பார்வையாளர் மூலம் மேற்பார்வையில் செய்யப்படுகிறது. நகரின் சேகரிக்கப்படும் குப்பைகளை 10 சிறிய ரக லாரி (LCV) , 18 BOV மூலம் தினந்தோறும் அப்புறப்படுத்தப்படுகிறது.

**22) துப்புரவு பணி:**

நகராட்சியில் 11969 மொத்த குடியிருப்புகள் உள்ளது. துப்புரவுப்பணியாளர்கள் துப்புரவு பணிகளை செவ்வனே செய்து வருகின்றனர்.

நகராட்சியில் மலேரியா நோய் ஒழிப்புத்திட்டம் கூடுதல் பணியாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2 துப்புரவு பணியாளர்கள் மருந்து தெளிக்கும் பணியாளர் மேற்கொண்டு வருகின்றார். நகராட்சி பகுதி ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வாரம் ஒரு முறை கொசு லார்வா ஒழிப்பு தெளிக்கப்படுகிறது. பணியை சுகாதார ஆய்வாளர்களால் கண்காணிக்கப்படுகிறது. நகரில் கொசு உற்பத்தியினை குறைக்க தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**23) கலவை உரம்**

சந்தை பகுதியில் 2 எண்ணிக்கையிலான குப்பைகள் உருவாகும் தலத்தில் உரமாக்கும் மையமும் (OCC) இரண்டு எண்ணிக்கையிலான நுண் உர மையமும் (MCC) செயல்பட்டு வருகிறது. அதன் மூலம் 7.5MTஅளவிலான மக்கும் குப்பைகள் தினசரி உரமாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

**24) உணவு கலப்பட தடைச்சட்டம்:**

உணவு பாதுகாப்பு சட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் தனித்துறையாக செயல்படுத்தப்பட்டுவருகிறது.

*25)* வாடகைக்கு ஓடும் கார்கள் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

*26)* சந்தைகள், பேருந்து நிலையம் ஆடுவதை நிலையம், நகராட்சியால் பராமரிக்கப்படுகின்றன.

அறிக்கையாண்டிலும், அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் கிடைத்த வருமானம் பின்வருமாறு.

| வருடம் | ஆண்டு குத்தகை (ரூ.இலட்சத்தில்) | கடை வாடகை (ரூ.இலட்சத்தில்) | மொத்தம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2021-2022 | **147.78** | **79.78** | **227.56** |
| 2022-2023 | 157.48 | 58.31 | 215.79 |
| 2023-2024 | 158.75 | 71.21 | 229.96 |

***27) சந்தைகள்:***

இந்நகர் மன்றம் வாரச்சந்தை காய்கனி சந்தை ஆக இரண்டு சந்தைகளும் தனித்தனியாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

**28) பேரூந்து நிலையம்**

உள்கட்டமைப்பு நிதியின் கீழ் ரூ. 550.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேரூந்து நிலையம் மற்றும் கடைகள் கட்டப்பட்டு 04.06.2017–ல் பயன்பாட்டிற்கு வரப்பெற்றது. இந்நகராட்சி திருச்சி, மதுரை தேசிய நெடுஞ்சாலையின் மத்திய பகுதியாகும், கரூர் புதுக்கோட்டை முக்கிய சாலையின் பிரதான நகரமாக அமையப்பெற்றுள்ளது. மேலும், இந்நகர் வாணிப நகரமாகும் இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் பொது வாரச்சந்தைகள் தமிழகத்தின் தலை சிறந்த புகழ்மிக்க சந்தையாகும். இக்காரணங்களினால் இந்நகராட்சியால் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் பொதுமக்களுக்கும், வணிகர்களுக்கும் பயனுள்ளதாகவும் மற்றும் சிறப்புறவும் விளங்குகிறது.

நகராட்சி பேரூந்து நிலையத்திற்கு நாளொன்றுக்கு சராசரியாக 250 பேரூந்துகள் வந்து செல்கின்றன. அறிக்கையாண்டில் பேரூந்து நிலைய வசூலை பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**29) மிதிவண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் :**

புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

***30) வாடகை உந்து நிலையம்.***

வாடகை உந்துநிலையம் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

**31) சாலையோர மரங்கள்**

சாலை ஓர மரங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான மரங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**32) நகரமைப்பு பிரிவு**

அறிக்கை ஆண்டில் நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் இருந்துவருகிறது.

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் சங்கிலியாளர் பணி நியமனம் செய்யப்படவில்லை இந்நகராட்சி எல்கையில் உள்ள தெருப்பகுதிகள் மட்டும் 1964ம் ஆண்டில் அளந்து பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது நகர புல அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணி முடிந்துள்ளது. இன்னும் அரசு பதிவேட்டில் பிரசுரிக்கப்படவில்லை. இந்நகராட்சியில் ஏற்கனவே ஒன்பது நகரமைப்பு திட்டங்கள் செயலில் இருந்து வந்துள்ளது. இந்நகரமைப்பு திட்டங்களில் 1 முதல் 4 வரை இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

***33) விரிவு மேம்பாட்டுத்திட்டம் :***

இந்நகராட்சியில் சட்டப்பிரிவு 12 ன் கீழ் நகரமைப்பு திட்டங்கள் பதிவு செய்யப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மணப்பாறை பேரூராட்சியில் இருந்து நகராட்சி அந்தஸ்து 1.10.66 அரசு ஆணை எண். 2318 நாள்.30.9.66 முதல் பெற்றது. அப்போது கண்ணுடையான்பட்டி உசிலம்பட்டி, செவலூர் கலிங்கப்பட்டி ஆகிய கிராமங்களை உள்ளடக்கி இருந்தது 10.4.74 ம் தேதிய ஊர்

வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண். 1959 ன் படி நீக்கம் செய்யப்பட்டு முன்னாள் பஞ்சாயத்து பகுதியான செவலூர் கிராமம் மட்டும் தற்போதைய நகராட்சியின் எல்லையாக நிர்ணயிக்கப்பட்டது.

விரிவு அபிவிருத்தி திட்டங்கள் காலவரையினை நீடித்து தரக்கோரி அரசுக்கு விண்ணபிக்க மன்றத்தின் முன் பொருள் வைக்கப்பட்டதில் அன்றைய நகர்மன்றம் தனது 2.1.74 ம் தேதிய தீர்மான எண்.437ல் நகராட்சி நிதிநிலை சரியில்லாத காரணத்தால் 10 ஆண்டு காலத்திற்கு திட்டங்கள் அமுல்படுத்துவதை தள்ளிப்போட தீர்மானித்தது. பின்னர் விரிவு அபிவிருத்தி திட்டங்களை 1 முதல் 4 வரை நகர் ஊரமைப்பு இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு அரசால் 1989ம் ஆண்டில் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இக்குழுமம் தனித்து மணப்பாறை உள்ளூர் திட்டக்குழுமம் என அறிவிக்கப்பட்டு உள்ளது. மணப்பாறை நகராட்சிப் பகுதி தற்போது நில அளவை துறையினரால் நில அளவை செய்யப்பட்டுள்ளது. இன்னும் அரசிதழில் நில அளவை பற்றிய அறிக்கை வெளியிடப்படாத நிலையில் உள்ளது.

மணப்பாறை நகராட்சிப்பகுதிக்கு காவேரி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி கிடைக்கப்பெற்றுள்ளதால் வளர்ச்சிகள் பல்வேறு வகைகளில் ஏற்பட்டுள்ளது. தற்போது, ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் திட்ட உத்தேசங்களுக்கு ஏற்றதாக இல்லாமல் மாறுதல் செய்ய வேண்டியுள்ளது. இந்நகராட்சியில் மேற்படி உத்தேசங்களை தயாரிக்கவும் அமுல் படுத்தவும் போதிய அலுவலர்களும் பணியாளர்களுக்கும் மாதம் மாதம் ஊதியம் வழங்க நிதிநிலையும் இல்லை. நில அளவை பதிவேடுகள் இல்லாமையால் நகரளவை சங்கிலியாளரும் நியமிக்கப்படவில்லை. மேலும், பொருளாதார நிதிக்குறைவின் காரணமாக பொதுநிதியிலிருந்து ஒருவிழுக்காடு தொகையை உள்ளூர் திட்டக்குழுமம் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.

## 34) வரைகடப்புகள்

இந்நகராட்சியில் பராமரிப்பிலுள்ள தெருக்கள் யாவும் 1948 ம் ஆண்டு சர்வே செய்யப்பட்டவை நகரளவையர் பதவி இவ்வலுவலகத்தில் இல்லாமையால் நகர நிலவரித்திட்ட சர்வேயரைக் கொண்டு தெருக்களில் ஏற்படும் வரை கடப்புகளை அளந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

## 35) தொழிற்பகுதியாக அறிவித்தல்:

இந்நகராட்சியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தொழிற் பகுதிக்கு கூடுதலாக குளித்தலை சாலையில் ஏற்பட்டுள்ள ஒரு தொழிற்சாலை பகுதிகளை தொழில் பகுதியென அறிவிக்க அரசினரின் இணக்கம் பெறப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அறிக்கையாண்டில் சொத்துவரி கேட்பு வசூல் நிலுவை விவரம்**

| விபரம் | நிலுவை (ரூ.இலட்சத்தில்) | நடப்பு (ரூ.இலட்சத்தில்) | மொத்தம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| கேட்பு | 157.19 | 392.04 | 549.23 |
| வசூல் | 45.56 | 334.80 | 380.36 |
| நிலுவை | 111.64 | 57.23 | 168.87 |

01.04.2022 ல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டு மண்டல மதிப்பு மாற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையில் தற்போது வரி நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

பொது வருவாய்

சொத்துவரியில் குறிப்பிடப்பட்டுள்ளவை சேர்ந்துள்ளன.

வருட வாடகை மதிப்பில் அரைவருட சதவிதிகம்

1) பொதுக்காரியங்களுக்கு 6.5 %
2) கழிப்பிட வரி 1 %
3) தண்ணீர் சாக்கடை வரி 6 %
4) விளக்குவரி 1.5 %
5) கல்வி வரி 2.5 %

காலி நில வரி

அரசாணை நிலை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (.ந.நி.4) துறை, நாள்.30.03.2022-ன்படி, 01.4.2022ல் சொத்துவரி சீராய்வில் காலிமனை வரிவிதிப்பு மண்டல மதிப்பு மாற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையில் தற்போது வரி நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது

தொழில் வரி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 விதி எண்.275- ன்படியும், தமிழ்நாடு அரசாணை (நிலை) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.01.1999-ன் படியும், அதனடிப்படையில் மணப்பாறை நகர்மன்ற தீர்மானம் எண்.449 நாள். 11.01.2024-ன்படியும், 2023-24 II-ம் அரையாண்டு முதல் உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட்டது.

வரி விதிப்பு விகிதங்கள்

வ.எண். அரைவருட வருமானம் மொத்தச்சம்பளம் அரைவருடவரி

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் | 01.10.2023க்கு பின் நிர்ணயம் செய்யப்படும் அரையாண்டு தொழில்வரி (ரூ) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | ரூ.21,000/- வரை பெறுவோர் | இல்லை |
| 2 | ரூ.21,001/- முதல் 30,000/- வரை | 240 |
| 3 | ரூ.30,001/- முதல் 45,000/- வரை | 599 |
| 4 | ரூ.45,001/- முதல் 60,000/- வரை | 1202 |
| 5 | ரூ.60,001/- முதல் 75,000/- வரை | 1250 |
| 6 | ரூ.75,001/- முதல் அதற்கு மேல் | 1250 |

தொழில்வரி

தொழில்வரி கேட்பு வசூல் நிலுவை விவரம்

| விபரம் | நிலுவை (ரூ.இலட்சத்தில்) | நடப்பு (ரூ.இலட்சத்தில்) | மொத்தம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| கேட்புத்தொகை | 43.14 | 36.13 | 79.27 |
| மொத்த வசூல் | 7.89 | 25.23 | 33.12 |
| நிலுவை | 35.25 | 10.91 | 46.15 |

**36) ஆண்டு வரவு செலவு**

ஆண்டின் வருமானம் – ரூ.2097.45 இலட்சம்
ஆண்டின் செலவு – ரூ.1894.28 இலட்சம்

***37) கடன் தொகை செலுத்தியது***

31.3.2024 ல் கடன் நிலுவை – ரூ.134.44 இலட்சம்

***38) தணிக்கை:***

அறிக்கை ஆண்டில் தொடக்கத்தில் இருந்து தணிக்கைத்தடைகள் -- 334 எண்ணிக்கை
அறிக்கையாண்டில் வரப்பெற்றது மொத்தம் -- 0
அறிக்கை ஆண்டில் நீக்கம் செய்யப்பட்டவை -- 123 எண்ணிக்கை
அறிக்கையாண்டில் இறுதி நிலுவை --211 எண்ணிக்கை

தணிக்கைத்தடை நிலுவையில் உள்ளதை நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

**39) சத்துணவு மையம்**

மணப்பாறை நகராட்சியின் கட்டுப்பாட்டில் நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் நகராட்சி துவக்கப் பள்ளி 3 ஆகிய நான்கு பள்ளிகளிலும் சத்துணவு மையங்கள், பள்ளிச்சத்துணவு ( SCHOOL NOON MEAL ) என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது. 5 வயது முதல் 14 வயதுள்ள ஆண் பெண் இருபாலருக்கு சுமார் 201 நபர்கள் நாள் ஒன்றுக்கு மதிய உணவு அருந்தி வருகிறார்கள்.

மேலும் முதலமைச்சரின் சிறப்பான திட்டமான காலை உணவுத் திட்டத்தின்கீழ் தினசரி சராசரியாக 207 மாணவ மற்றும் மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

## முடிவுரை

இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி. பொது சுகாதார வசதி மற்றும் தெரு விளக்கு வசதிகள் அனைத்தையும் தொய்வில்லாமல் வழங்கி நகராட்சி நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியில் அனுப்பப்படும் கருத்துரைகளை ஏற்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதுபோல் இந்நகராட்சியின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டப்பணிகளை முழுமையாகவும் துரிதமாகவும் செயல்படுத்த முழு ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்த அனைத்து உள்/வெளி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறி இவ்வறிக்கையினை முடிக்கிறேன்.

ஆணையாளர்
மணப்பாறை நகராட்சி.